வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு


Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 23.05.2026 சனிக்கிழமை | இதழ் : 137 | பக்கங்கள் : 08




# பொருளாதார நெருக்கடிநிலை மீண்டும் ஏற்பட இடமளியோம்!

## கிழக்கில் கூறினார் ஜனாதிபதி அநுர



கொழும்பு, மே23

2022 ஆம் ஆண்டைப் போல நாட்டில் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்று சிலர் கருத்துக்களை வெளியிட்டு வந்தாலும், அத்தகையதொரு சூழ்நிலை நாட்டில் ஒருபோதும் ஏற்படாது என்றும், மத்திய கிழக்கில் நிலவும் யுத்த சூழலால் ஏற்பட்டுள்ள நிலைமை ஒரு வெளிப்புற நெருக்கடியாக இருந்தாலும், அதனை கையாள்வதற்கான ஆளுமை அரசாங்கத்திடம் உள்ளது என்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

நிந்தவூர் கலாசார நிலையத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் நேற்று முற்பகல் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது, இனவாதத்திற்கு இடமளிக்காமல் இருப்பது, ஊழல்வாதிகளுக்குத் தண்டனை வழங்குவது, அனைவருக்கும் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் நாட்டை உருவாக்குவது மற்றும் அரசியல்வாதிகளின் எல்லையற்ற சலுகைகளைக் குறைப்பது ஆகியவையே தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்தபோது மக்கள் வழங்கிய மக்கள் ஆணையின் எதிர்பார்ப்பாக

07

## கிழக்கை பாதுகாப்பதற்காக விசேட குழு நியமிக்கப்படும்!

### அம்பாறையில் கூறினார் ஜனாதிபதி

கொழும்பு, மே. 23

கிழக்கு மாகாணத்தின் காணிகளைப் பாதுகாப்பதற்காக, பிரதிப் பொலிஸ் மா அதிபரின் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி காணிகளைக் கைப்பற்றுவதன் காரணமாக கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரச்னைகள் எழுந்துள்ளதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு இனிமேலும் இடமளிக்க முடியாது என்றும் வலியுறுத்தினார்.

07

## நாட்டில் நெருக்கடி நிலை; அவசரமாக பாராளுமன்ற விவாதத்தை நடத்துங்கள்!

கொழும்பு, மே. 23

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை பற்றி அவசரமாக பாராளுமன்ற விவாதத்தை நடத்துமாறும், நிலைமை மோசமடைவதற்கு முன்னர் மக்களுக்கு நியாயமானதும், துரிதமானதுமான தீர்வொன்றை முன்வைக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி

07

## உலகளாவிய நெருக்கடியின் விளைவே டொலர் பெறுமதி அதிகரிக்க காரணம்!

### பிரதி அமைச்சர் அனில் ஜயந்த



கொழும்பு, மே. 23

டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு வீழ்ச்சியடைந்தமையானது, அரசாங்கத்தின் கொள்கை அல்லது தவறான தீர்மானம் அல்ல எனவும், மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலை காரணமாக உருவான உலகளாவிய

07

## இலங்கையின் சீர்திருத்தத் திட்டம் தொடர்ந்து முன்னேற்றமடைகிறது!

### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு



கொழும்பு, மே. 23

இலங்கையின் சீர்திருத்தத் திட்டம் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருவதாக சர்வதேச நாணய நிதியத்தின் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுத் தலைவர் எவன் பாபஜோர்ஜியு தெரிவித்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு

07

## ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியால் மருந்துத் தட்டுப்பாடு அபாயம்!

### வைத்தியர்கள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே. 23

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாக, நாட்டின் பொது மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் கடுமையான மருந்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக வைத்திய மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வைத்தியர்

07

## பஸில் ராஜபக்ஷவை கைது செய்ய உத்தரவு



கொழும்பு, மே. 23

முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை கைது செய்யுமாறு மாத்தறை நீதவான் நீதி மன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது

மாத்தறையிலுள்ள

07



## வலிகாமம் வடக்கு காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம்!

### 5 ஆவது வெள்ளியும் தொடர்ந்தது

யாழ்ப்பாணம், மே. 23

வலிகாமம் வடக்கு பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்க கோரி, காணி உரிமையாளர்கள்

இராணுவத்தினரின் "அதிகாரிகள்" பங்களா முன்பாக நேற்று ஐந்தாவது வெள்ளிக்கிழமை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வலிகாமம் வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் அவர்களது சொந்த இடங்களில்

07

## சட்டத்துக்கு பயந்து இப்போது நடுங்கும் அரசியல்வாதிகள்!

### பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க

கொழும்பு, மே. 23

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், கடந்த காலங்களில் அதிகாரத்தைக் கைப்பற்ற மக்களின் உயிர்களுடன் விளையாடிய அரசியல்வாதிகள் இப்போது சட்டத்திற்குப் பயந்து நடுங்கத்

07

## இலங்கை ரூபாய் கடும் அழுத்தத்தில் உள்ளது!

### சஜித் பிரேமதாஸ கவலை

கொழும்பு, மே. 23

இலங்கை ரூபாய் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும், அதனைத் தீர்ப்பதற்கான தெளிவான திட்டமோ அல்லது பதிலோ அரசாங்கத்திடம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் மீது விரிவான விசாரணை நடத்தவேண்டும்

## கந்தோலிக்க திருச்சபை கோரிக்கை

கொழும்பு, மே. 23

2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடையவர்களாக நீதிமன்றத்தில் தற்போது பெயர்கள் வெளிப்படுத்தப்பட்டு வரும் நபர்கள் குறித்து, வெறும் அறிக்கைகளுடன் மாத்திரம் சுருங்கி விடாது, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் வெளிப்படையான மற்றும் விரிவான விசாரணைகளை நடத்தவேண்டும் என கத்தோலிக்க திருச்சபை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தேசிய



ஊடகப் பணிப்பாளர் ஜூட் கிரிஷாந்த பெர்னாண்டோ தெரிவிக்கையில்- தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்கள் குறித்த விவரங்களை அதிகாரிகளே நீதிமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளதால், தற்போது பெயர்கள் குறிப்பிடப்பட்டு வரும் நபர்கள் குறித்து முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையிலும் பல பெயர்கள் வெளிவந்த போதிலும், அவற்றின் மீது எவ்வித அர்த்தமுள்ள நடவடிக்கைகளும் எடுக்கப்படாது வெறும் அறிக்கைகளுடன் மாத்திரம் முடங்கிப்போனதை நினைவூட்டிய அவர், தற்போதைய வெளிப்படுத்தல்களும் அவ்வாறு கடந்து செல்ல அனுமதிக்கப்படக்கூடாது எனத் தெரிவித்தார்.

(அ)

# நாணய நிதிய கடன் திட்டம் முடிந்த பின் அடுத்த கட்ட திட்டம் குறித்து பேச்சுக்கள்!

## வலியுறுத்துகிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு, மே. 23

தற்போதைய சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டம் முடிவடைந்த பின்னர் நடைமுறைக்கு வரவேண்டிய அடுத்த கட்டத் தொடர் திட்டம் குறித்து அரசாங்கம் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய திட்டத்தின் கீழ் வெளிநாட்டு கையிருப்பு இலக்குகளை அடைவதில் இலங்கை சரியான பாதையில் பயணிக்கவில்லை என எச்சரித்துள்ள அவர், இது குறித்து விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விவரங்களை வெளியிட்டுள்ளார்.

தற்போது இலங்கையிடம் 7 பில்லியன் டொலர் உத்தியோக பூர்வ கையிருப்பு மாத்திரமே உள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், 2027ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தற்போதைய திட்டம் நிறைவடையும்போது நாணய நிதியத்தின் கையிருப்பு இலக்கு 14.2 பில்லியன் டொலர்களாகும் எனத் தெரிவித்துள்ளார்.

இந்த இடைவெளியை நிரப்புவதற்கு அடுத்த 12 மாதங்களுக்கு மாதந்தோறும் 600 மில்லியன் டொலர்களைக் கையிருப்பில் சேர்க்க வேண்டும் என்ற போதிலும், நாடு அந்த இலக்கை நோக்கிச் செல்லவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### வாகன இறக்குமதி சர்ச்சை;

# எதிரணியின் குற்றச்சாட்டை அடியோடு மறுக்கிறது அரசு!

கொழும்பு, மே. 23

வாகன இறக்குமதி மீதான மேலதிக வரி விதிக்கப்படுவதற்கு முதல் நாள், 4,000 வாகனங்களுக்காக கடன் கடிதங்கள் திறக்கப்பட்டதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படையற்றது என பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் விளக்கமளிக்கையில், "4,000 வாகனங்களுக்கு கடன் கடிதங்கள் திறக்கப்பட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் பொய்யான தகவலாகும்.

உண்மையில், கடந்த மே 15ஆம் திகதி 380 கடன் கடிதங்கள் மட்டுமே திறக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 23.71 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 1,782 வாகனங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன" என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் குறிப்பிடும் புள்ளிவிவரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை மற்றும் மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கம் கொண்டவை என அவர் சுட்டிக்காட்டினார்.

"நாட்டில் ஏதோ ஒரு பாரிய பிரச்சனை இருப்பதாக ஒரு மாயையை உருவாக்கி, பொதுமக்களைத் திசைதிருப்பவே இவ்வாறான பொய்யான தகவல்கள் பரப்பப்படுகின்றன.

இத்தகைய ஆதாரமற்ற செய்திகளை நம்பி, பொதுமக்கள் தேவையற்ற கொள்வனவுகளில் ஈடுபட்டு நட்டமடைய வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக ஊடகங்களில் பகிரப்படும் உறுதிப்படுத்தப்படாத செய்திகளை மக்கள் நம்பவேண்டாம்" எனவும் பிரதி அமைச்சர் இதன்போது பொதுமக்களிடம் வலியுறுத்தினார்.

(அ)

# ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியால் கட்டுமானத்துறை நெருக்கடியில்!

கொழும்பு, மே. 23

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் மதிப்பு வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாக, நாட்டின் கட்டுமானத்துறை கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதாக தேசிய கட்டுமானச் சங்கம் எச்சரித்துள்ளது.

கட்டுமான ஒப்பந்தங்களின் போது பயன்படுத்தப்படும் விலை திருத்த சூத்திரத்தில், மூலப்பொருள்களின் விலை ஏற்ற இறக்கங்கள் மற்றும் ஏனைய செலவுகள் உள்ளடக்கப்படாவிட்டால், நாடு முழுவதும் உள்ள பல கட்டுமானத் திட்டங்கள் முற்றாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சங்கத்தின் தலைவர் எம். டேரின்டன் போல், ரூபாயின் வீழ்ச்சியால் இறக்குமதி செய்யப்படும் மின்சார மற்றும் இயந்திரவியல் சார்ந்த உதிரிப் பாகங்களின் விலைகள் தாங்க முடியாத அளவுக்கு அதிகரித்துள்ளதால், ஒப்பந்தக்காரர்கள் தங்களின் இலாப வரம்பை இழந்து வருவதாகக் குறிப்பிட்டார்.

குறிப்பாக, 90 நாள்களுக்கு உட்பட்ட குறுகிய கால ஒப்பந்தங்களுக்கு இந்த விலை திருத்தச் சூத்திரம் பொருந்தாது என்பதால், ரூபாயின் தற்போதைய வேகமான வீழ்ச்சியைக் கருத்திற்கொண்டு அத்தகைய திட்டங்களுக்கும் இதனை விரிவுபடுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கார்பெட் வீதிகளை அமைப்பதற்காக மத்திய கிழக்கிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தார் போன்ற பொருள்களின் விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளதால், அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்ட பல வீதி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

# நன்னீர் மீன்பிடித் திட்டங்களை வடக்கின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்குங்கள்!

## சர்வதேச தொழிலாளர் அமைப்பிடம் ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே. 23

வடக்கு மாகாணத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக சர்வதேச தொழிலாளர் அமைப்பு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்பதாகவும், அவற்றை வடக்கின் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்துவது அவசியம் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் வலியுறுத்தினார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பும் நோர்வேத் தூதரகமும் சேர்ந்த பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநரைச் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.



வடக்கு மாகாணத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயமும் மீன்பிடித் துறையும் காணப்படுகின்றன என்றும், ஆனால் விவசாயிகளும் மீனவர்களும் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதிலும் நியாயமான விலையைப் பெறுவதிலும் சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார். இடைத்தரகர்களே அதிக இலாபம் பெறும் நிலை தொடர்வதாகவும், இதனை மாற்றுவதற்குப் பெறுமதி சேர் உற்பத்தித் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பிரதிநிதிகள் கேட்டறிந்தபோது, கடந்த ஜனவரியில் "தி மனேஜ்மென்ட் கிளப்" ஊடாக வடக்கு முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். மேலும், தற்போதைய அரசாங்கம் வடக்கில் மூன்று புதிய முதலீட்டு வலயங்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் அடிப்படை கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதேவேளை, வடக்கு மீனவர்கள் இன்னமும் பாரம்பரிய முறைகளிலேயே கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், அவர்களுக்கு பலநாள் மீன்பிடிப் படகுகள் வழங்கி நவீன தொழில்நுட்பத்தை நோக்கி வழிநடத்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

(அ)

# மருந்து பொருள்களின் விலையை 20 வீதம் அதிகரிக்கக் கோரிக்கை

கொழும்பு, மே. 23

"நாட்டில் நிலவும் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், மருந்துகளின் விலையை 20 வீதத்தால் அதிகரிக்குமாறு மருந்து உற்பத்தியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 10 வீதத்துக்கும் அதிகமாக வீழ்ச்சியடைந்துள்ளமை, மருந்து உற்பத்தி மூலப்பொருள்களின் விலை உயர்வு மற்றும் காப்புறுதி, போக்குவரத்து செலவுகள் 3 முதல் 4 மடங்கு அதிகரித்துள்ளமை போன்ற காரணங்களால் இந்த விலையேற்றத்தைக் கோரியுள்ளதாக அச்சங்கத்தின் தலைவர் நளின் கண்ணங்கர தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக மருந்துகளின் விலைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை எனவும், தற்போதைய சூழ்நிலையில் விலையை அதிகரிக்காவிட்டால் இந்தத் துறையை முறையாகக் கொண்டு நடத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
23.05.2026 சனிக்கிழமை
பராபவ வருடம், வைகாசி 09

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மூன்றாவது குடியரசு அரசியலமைப்பு வருமா?

இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டு நேற்றைய தினத்துடன் சரியாக 54 வருடங்கள் நிறைவடைந்தன.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தினால் 1972 மே 22 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அந்த அரசியலமைப்புத்தான் அதுகாலவரை கூட்டாட்சி அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கோரிநின்ற இலங்கை தமிழர்களை தனித்தமிழ்நாட்டுக் கோரிக்கையை நோக்கித் தள்ளயது.

இலங்கையை ஒற்றையாட்சி அரசு என்று முதன்முதலாகப் பிரகடனம் செய்ததும் பௌத்த மதத்துக்கு அதிமுதன்மை அந்தஸ்தை வழங்கியதும் அந்த அரசியலமைப்பேயாகும்.

1956 ஆம் ஆண்டில் தனிச்சிங்களச் சட்டத்தை பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிறைவேற்றியபோது "இரு மொழிகள் ஒரு நாடு, ஒரு மொழி இரு நாடுகள்" என்ற பிரபல்யமான எச்சரிக்கையைச் செய்த லங்கா சமசமாஜ கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரும் சட்ட மேதையுமான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வாவே அந்த முதலாவது குடியரசு அரசியலமைப்பை வரைந்தவர் என்பது ஒரு வரலாற்று முரண்நகையாகும்.

அந்த அரசியலமைப்பு வெறுமனே ஆறு வருடங்கள் மாத்திரமே நடைமுறையில் இருந்தது. ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம் 1978 ஆம் ஆண்டில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை கொண்டுவந்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய அந்த அரசியலமைப்பு 48. வருடங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது.

இலங்கையில் மிகவும் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வரும் அந்த அரசியலமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சகலதுமே அடிப்படையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்த போதிலும், அது சாத்தியமாகவில்லை.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவின் அரசாங்கமும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கமும் முன்னெடுத்த புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் தேசிய இனப்பிரச்சினைக்கு கணிசமானளவு அதிகாரப் பரவலாக்கலின் அடிப்படையில் தீர்வைக் காண்பதையும் நோக்கமாகக் கொண்டிருந்த போதிலும் அதில் வெற்றி பெற முடியவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதாக உறுதியளிக்காத போதிலும், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கியது. ஆனால், அவரும் பிறகு ஜனாதிபதியாக வந்த சகோதரர் கோட்டாபய ராஜபக்சவும் ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதற்கான அரசியலமைப்பு திருத்தங்களைக் கொண்டுவந்தனர். ஆனால், அவர்கள் விரும்பியதைப் போன்று நீண்டகாலம் ஆட்சியில் இருக்க முடியவில்லை. நான்கு வருடங்களுக்கு முன்னர் மக்கள் கிளர்ச்சி அவர்களை ஆட்சியில் இருந்து தூக்கியெறிந்தது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதாக தேசிய தேர்தல்களின்போது நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தது. அரசாங்கங்கள் அரசியலமைப்பை மாற்றும் செயன்முறைகளை அவற்றின் பதவிக்காலத்தின் முற்பகுதியில் முன்னெடுப்பதே வழமையாகும். அதுவே அரசியல் ரீதியில் சாத்தியமானதும் கூட.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து சுமார் 19 மாதங்கள் கடந்து விட்டன. புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை முன்னெடுக்கப்படக்கூடிய அறிகுறி எதையும் இதுவரையில் காணவில்லை.

அரசாங்கம் எதிர்நோக்குகின்ற சவால்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது அரசாங்கம் அதன் முதலாவது பதவிக் காலத்தில் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரக்கூடிய சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

இறுதியில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் கடந்து நீடிக்கப் போகிறது. என்றே தெரிகிறது.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எதிராக அமெரிக்கா-ரஷ்யா- சீனா கூட்டாக செயற்பட வேண்டும்

## டொனால்ட் ட்ரம்ப் முனவைக்கும் யோசனை



கடந்த வாரம் பெய்ஜிங்கில் சீன அதிபர் சி ஜின்பிங்கைச் சந்தித்தபோது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ICC) எதிராக அமெரிக்கா, சீனா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் யோசனை முன்வைத்தாக பிரிட்டிஷ் நாளிதழ் / பைனான்சியல் ரைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை எதிர்ப்பதில் இந்த மூன்று நாடுகளின் "நலன்களும் ஒத்துப்போவதால்" ட்ரம்ப் இந்த ஆலோசனையை வழங்கியதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2025 பெப்ரவரியில், அமெரிக்க அல்லது இஸ்ரேலிய குடிமக்கள் மீதான விசாரணைகளில் ஈடுபட்டுள்ள நான்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக ட்ரம்ப் தடைகளை விதித்தார். 1998 ஆம் ஆண்டில் ரோம் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, 2002 முதல் செயற்படத் தொடங்கிய இந்த நீதிமன்றம், இனப் படுகொலை, மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க் குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்புக் குற்றங்களில் ஈடுபடும் தனிநபர்களைத் தண்டிக்கும் அதிகாரம் கொண்டது.

அண்மைய ஆண்டுகளாக ரஷ்யாவுக்கும் உக்ரெயினுக்கும் இடையே நடந்துவரும் போரில், உக்ரேனியக் குழந்தைகளை சட்ட விரோதமாக நாடு கடத்தியது தொடர்பான போர்க் குற்றங்களுக்காக ரஷ்ய ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக இந்த நீதிமன்றம் கைது ஆணை பிறப்பித்தது.

2024 ஆம் ஆண்டில், காசா. போரின்போது பட்டினியை ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தியதாகக் கூறி, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கும் அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் யோாவ் காலாண்ட்டுக்கும் எதிராகவும் இந்த நீதிமன்றம் கைது ஆணை பிறப்பித்தது.

அமெரிக்க ஜனாதிபதி இந்த நீதிமன்றத்தை தொடர்ந்து விமர்சித்து வருகிறார். அமெரிக்காவோ அல்லது இஸ்ரேலோ ரோம் சட்டத்தில் கையெழுத்திடவில்லை, அதே போன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தையும் அங்கீகரிக்கவில்லை. இந்த நீதிமன்றத்திற்கு எதிராகப் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்த நீண்ட வரலாறு இருந்தபோதிலும், டிரம்ப் நிருவாகம் இந்த பைனான்சியல் டைம்ஸ் செய்தி குறித்து கருத்து தெரிவிக்க மறுத்து விட்டது.

மே 13 முதல் 15 வரை பெய்ஜிங்கிற்கு மூன்று நாள் பயணமாகச் சென்றிருந்தபோதுதான் ட்ரம்ப் இந்தத் யோசனையை சி ஜின்பிங்கிடம் தெரிவித்தார். இந்த விஜயத்தின் போது அமெரிக்க ஜனாதிபதியும் சீன ஜனாதிபதியும் பல ஒப்பந்தங்களைச் செய்துகொண்டனர். உலகின் இரு பெரும் பொருளாதார வல்லரசுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை நிருவகிப்பதற்காக இரு நாடுகளும் ஒரு வர்த்தக சபையையும் முதலீட்டுச் சபையையும் அமைக்கவுள்ளன.

சீனா குறைந்த பட்சம் 17 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான விவசாயப் பொருட்களையும், போயிங் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட குறைந்தது 200 சிவிலியன் விமானங்களையும் வாங்கும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ட்ரம்ப் சீனத் தலைநகர் பெய்ஜிங்கிலிருந்து புறப்பட்ட அடுத்த நான்கு நாட்களிலேயே புட்டனின் சீனா பயணம் அமைந்தது. மாஸ்கோவும் பீஜிங்கும் தங்களது பொருளாதார ஈடுபாட்டை மேலும் வலுப்படுத்த முனையும் வேளையில் ரஷ்ய ஜனாதிபதி அங்கு வந்தார்.

பீஜிங் வருகைக்கு முன்னதாக, உக்ரெயின் மீதான தனது படையெடுப்பிற்காக ரஷ்ய ஜனாதிபதி இறுதியில் "வருத்தப்பட வேண்டியிருக்கும்" என்று டிரம்ப்பிடம் சி ஜின்பிங் குறிப்பிட்டதாக அந்த பிரிட்டிஷ் நாளிதழ் தெரிவித்தது.

ஆனால், சீன வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் செவ்வாயன்று எக்ஸ் சமூக ஊடகத் தளத்தில் வெளியிட்ட அறிக்கையில், பைனான்சியல் டைம்ஸ் கட்டுரையில் கூறப்பட்டுள்ள கூற்றுகள் "முற்றிலும் தவறானவை" என்று கூறினார்.

உக்ரெய்ன் போர் குறித்தும் விவாதிக்கப்பட்ட டிரம்புடனான விரிவான பேச்சுவார்த்தையின் போது சி ஜின்பிங் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்ததாக கூறப்படுகிறது. இந்தப் போர் 2022 பெப்ரவரியில் தொடங்கி தற்போது ஐந்தாவது ஆண்டாக நீடிக்கிறது. முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்துடனான விவாதங்களை விட, ட்ரம்பிடம் சி ஜின்பிங் பேசிய விதம் மிகவும் வெளிப்படையாக இருந்ததாக பைனான்சியல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

ரஷ்யா - உக்ரெயின் போர் தற்போது ஒரு தேக்க நிலையை எட்டியுள்ளது, கடந்த இரண்டு ஆண்டுகளாக போர்க்கள எல்லைகளில் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. இலக்குகளைத் தாக்குவதற்காக வான், நிலம் மற்றும் கடல் வழியே பயன்படுத்தப்படும் ட்ரோன்கள் போன்ற ஆளில்லா வாகனங்கள் உள்ளிட்ட புதிய பாதுகாப்பு தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் நிலைக்கு இரு நாடுகளும் நகர்ந்துள்ளன.

இரண்டாம் உலகப் போரில் சோவியத் யூனியனின் வெற்றியைக் கொண்டாடும் வகையில் மொஸ்கோவில் மே 9 ஆம் தேதி கொண்டாடப்பட்ட வெற்றி தினத்தை முன்னிட்டு, ரஷ்யாவும் உக்ரெயினும் மூன்று நாள் தற்காலிக போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்தன.

இதற்கிடையில், கடந்த்வார இறுதியில் ரஷ்ய தலைநகரில் உக்ரெயின் நடத்திய ட்ரோன் தாக்குதல்களின் விளைவாக இந்திய குடிமகன் ஒருவர் மொஸ்கோவில் கொல்லப்பட்டார். உக்ரெயினின் இந்தத் தாக்குதலில் மேலும் மூன்று இந்தியர்கள் காயமடைந்தனர். மொஸ்கோவிற்கு எதிராக உக்ரெயின் நடத்திய இந்த ட்ரோன் தாக்குதல்கள், கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக நடத்தப்பட்ட தாக்குதல்களில் மிகப் பெரியதாகும்.

மொஸ்கோ பிராந்தியத்தில் உள்ள ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் இரண்டு எண்ணெய் நிலையங்களைத் தாக்குவதை உக்ரெயின் நோக்கமாகக் கொண்டிருந்தது.

**(கேஷவ் பத்மநாபன், த பிறின்ற்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். புதுவேலை கிடைக்கும். தள்ளிப் போன காரி யங்கள் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார் கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச் னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தி யோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல் லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கைமாற் றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர் கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப் பீர்கள். தடைகள் உடைபடும் நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்க ளுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம், பொருள், ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். உத்தியோகத்தில் பிரச்னை கள் வந்து விலகும். எதிலும் கவனம் தேவைப்படும்.

**கன்னி**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங் கும் முயற்சி வெற்றி அடையும். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். உங்க ளிடம் பழகும் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்க ளின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். உத்தி யோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டிய வரும். நேர்மறை எண்ணங்கள் தேவை.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதி காரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கும்பம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப் பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். உத்தியோகத்தில் அதிகா ரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள்.

**மீனம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளை களின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர் கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங் குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

# வடக்கில் இம்முறை சிறுபோக நெற்செய்கை ஊடாக 1.74 இலட்சம் மெற்றிக்தொன் விளைச்சல் எதிர்பார்ப்பு

யாழ்ப்பாணம், மே. 23

வடக்கு மாகாணத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கையின் ஊடாக 1.74 இலட்சம் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் எதிர்பார்க்கப்படு கின்றது. இதுவே வடக்கு மாகா ணத்தில் சிறுபோகமொன்றில் எதிர்பார்க்கப்படும் அதி உச்ச விளைச்சலாகும் என வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் எஸ்.சிவஸ்ஸ்ரீ தெரி வித்தார்.

மாகாண விவசாய அமைச் சால் வெளியிடப்பட்டுள்ள சிறு போக உத்தேச இலக்குகளின் பிரகாரம், இம்முறை மாகாணம் முழுவதும் மொத்தமாக 39,215 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஊடாக ஒட்டுமொத்த மாகாண ரீதியிலான நெல் உற்பத்தித்திற னானது ஹெக்ரேயருக்கு 4.4 மெற்றிக் தொன்களாகக் கணிப் பிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக் களம் மாகாண குறித்தொதுக்கப் பட்ட நிதி உள்ளிட்ட பல்வேறு நிதி மூலங்களின் ஊடாகக் குளங்களைப் புனரமைப்புச் செய்தமையும் இந்த அதி உச்ச விளைச்சல் இலக்கு சாத்தியமா கியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

மாகாணத்திலேயே அதிகபட் சமாக முல்லைத்தீவு மாவட்டத் தில் 13,805 ஹெக்ரேயர் நிலப்ப ரப்பில் நெற்செய்கை மேற் கொள்ளப்ப டவுள்ளதுடன், ஹெக்ரேயருக்கு 4.5 மெற்றிக் தொன் உற்பத்தித்திறன் அடிப் படையில் 62,123 மெற்றிக் தொன் விளைச்சல் எதிர்பார்க்கப்படுகி றது. இதற்கு அடுத்தபடியாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் 12,523 ஹெக்ரேயர் நிலப்பரப் பில் நெற்செய்கை முன்னெடுக் கப்பட்டு 56,354 மெற்றிக் தொன் விளைச்சலும், வவுனியா மாவட் டத்தில் 8,601 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் 34,404 மெற்றிக் தொன் விளைச்சலும் எதிர்பார்க் கப்படுகிறது. மன்னார் மாவட் டத்தில் 4,286 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது டன், மாகாணத்திலேயே அதிக பட்ச உற்பத்தித்திறனாக ஹெக் டேயருக்கு 5.0 மெற்றிக் தொன் அடிப்படையில் அங்கு 21,430 மெற்றிக் தொன் நெல் விளைச் சல் கிடைக்கும் எனக் கணிப்பி டப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ)

# இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக கலாநிதி சிவசிந்துஜா!



யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக இணைந்த சுகாதார விஞ் ஞானங்கள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக கலாநிதி சிவ சிந்துஜா - ரீகோகுலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பீடாதி பதியாகக் கடமையாற்றிய திரு மதி தெய்வி தபோதரனின் பத விக்காலம் நிறைவுக்கு வந்ததை அடுத்து, புதிய பீடாதிபதியைத் தெரிவு செய்வதற்காக இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத் தின் பீடச்சபை நேற்று முன் தினம் வியாழக்கிழமை கூடி யது. புதிய பீடாதிபதி தெரி வுக்காக இருவர் போட்டியிட்ட னர். கலாநிதி சிவசிந்துஜா சிறீ கோகுலன் 4 மேலதிக வாக்குக ளால் முன்னிலை பெற்றுப் பீடா திபதியாகத் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் முதல் அடுத்துவரும் மூன்று ஆண்டு களுக்குச் செயற்படும் வகையில் இந்தத் தெரிவு இடம்பெற்றுள் ளது.

(அ)

# வவுனியா மாநகர சபை முறைகேடுகள் இலஞ்ச ஆணைக்குழுவில் முறைப்பாடு!

வவுனியா, மே. 23

வவுனியா மாநகரசபையில் இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளதாக வவுனியா மாநகரச பையின் சுயேச்சை உறுப்பினர் எஸ்.பிறேமதாஸ் தெரிவித்துள் ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

வவுனியா நகரசபை மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டி ருந்தது. அந்த சபையில் தமிழ ரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, ஜனநாயக தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன இணைந்து ஆட்சி அமைத்திருந்தன.

குறித்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு செயற்பாடுகளில் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் இடம்பெற் றதாக செய்யப்பட்ட முறைப் பாட்டுக்கு அமைய வடக்கு மாகாண ஆளுநரால் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று பல்வேறு முறைகேடுகளும், அதிகார துஷ்பிரயோகங்களும் இடம்பெற்றமை வெளிப்படுத் தப்பட்டுள்ளது. அத்துடன் கையூட்டுக்களும் இடம்பெற் றுள்ளதாக சந்தேகம் வெளிப்ப டுத்தப்பட்ள்ளதுடன் அரச நிதி முறைகேடும் இடம்பெற்றுள்ளது.

குறித்த விசாரணை அறிக் கையை அடிப்படையாக கொண் டும் கையூட்டு தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு மக்களது வரிப்ப ணத்தை மக்களுக்கே வழங்கும் நோக்கிலும், ஊழல் மோசடியை தடுக்கும் வகையிலும் லஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன் னாள் முதல்வருக்கு எதிராக என் னால் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. அத்துடன் அரச நிதி முறைகேடு தொடர்பில் குற்றத் தடுப்பு பிரிவிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவை குறித்து விரைவில் விசாரணை கள் இடம்பெறவுள்ளது-என்றார்.

(அ)

# மல்லாகம் மகா வித்தியாலயத்தில் புதிய நுழைவாயில் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மே. 23

மல்லாகம் மகா வித்தியால யத்தின் புதிய நுழைவாயில் திறப்புவிழாவும் சாதனை மாண வர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் பாடசாலை வளா கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்வுக்கு கல்லூரி முதல் வர் சி. கணேசராசா தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக வலி காமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜமுனா ராஜசீலன் கலந்துகொண் டார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா. சிவனேசன், உடற்கல்வி உதவிக்கல்விப்ப ணிப்பாளர் கு. செந்தில்குமரன் மற்றும் பழைய மாணவியும் சட்டத்தரணியுமான திருமதி காயத்திரி அகிலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர் சங்க உப தலைவர் ந. ஆனந்தகுமார், ஓய்வு நிலை அதிபர்களான மா. நாகேந்திரசீலன், ந. சுப்பிரமணி யம், கு. திருச்செல்வம், திருமதி யோ. தில்லைநாதன் மற்றும் ஓய்வு நிலை பிரதி அதிபர் திரு மதி வாசுகி சச்சிதானந்தம் ஆகி யோரும் நிகழ்வில் பங்கேற்ற னர்.

விருந்தினர்கள் பாடசாலை பாண்ட் வாத்திய இசையுடன் வரவேற்கப்பட்டதுடன், அவர் களுக்கு மலர் மாலைகள் அணி விக்கப்பட்டு மங்கள விளக் கேற்றத்துடன் நிகழ்வுகள் ஆரம் பிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து புதிய நுழைவாயில் திறந்து வைக்கப் பட்டதுடன், கல்வி, விளை யாட்டு மற்றும் பல்வேறு துறை களில் சாதனை படைத்த மாண வர்களும் கௌரவிக்கப்பட்ட னர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வாகன இறக்குமதி வரி குற்றச்சாட்டு; உடனடி விசாரணை நடத்தவேண்டும்!

## வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே. 23

"வாகன இறக்குமதிக்கு 50 வீத கூடுதல் கட்டணம் விதிக்கப்படுவதற்கு முன்னதாக, 2 நிறுவனங்கள் சுமார் 4000 கடன் கடிதங்களை திறந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்து உரிய விசாரணைகளை முன்னெடுக்குமாறு வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் கடந்த 16 ஆம் திகதி முதல் வாகன இறக்குமதிக்கு 50 வீத கூடுதல் கட்டணத்தை விதித்திருந்த நிலையில், அதற்கு முந்தைய வாரத்தில் சில புதிய வாகன முகவர் நிறுவனங்கள் பெருமளவிலான கடன் கடிதங்களை திறந்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இக்குற்றச்சாட்டு குறித்து நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியன உடனடியாக ஆராயவேண்டும் என வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் அரோஷ் ரொட்ரிகோ வலியுறுத்தியுள்ளார்.

பயன்படுத்திய வாகனங்களை இறக்குமதி செய்பவர்கள் போலன்றி, புதிய வாகன முகவர்கள் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கு முன்னரே பெருமளவில் கடன் கடிதங்களை திறக்க முடியும் என்பதால், இந்த புதிய கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் அவர்களால் அடுத்த சில வருடங்களுக்கு தொடர்ந்து வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் ஒரு தரப்பினர் மட்டும் இவ்வாறு பாரிய நன்மைகளைப் பெறுவது அநீதியானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# சைபர் குற்றங்கள் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரிப்பு!

## அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, மே. 23

இலங்கையில் சைபர் குற்றங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், அது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை பெருமளவில் உயர்ந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, மாகாண மட்டத்தில் விசேட சைபர் குற்ற விசாரணைப் பிரிவுகள் நிறுவப்பட்டு வருகிறது. தற்போது பல மாகாணங்களில் சைபர் குற்ற விசாரணைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதன் அடுத்த கட்டமாக, எதிர்காலத்தில் ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் இத்தகைய கணினி குற்ற விசாரணைப் பிரிவுகளை நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு விசேட விசாரணைப் பிரிவு செயல்பாட்டுக்கு வரும்.

மேலும், இந்த சைபர் குற்றங்களை ஒடுக்குவதற்காக அரசாங்கம் பல முக்கிய நிறுவனங்களை ஒருங்கிணைத்து கூட்டு நடவடிக்கை ஒன்றை எடுத்துள்ளது. இதன்படி

இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வுப் பிரிவு, இலங்கை கணினி அவசரப் பிரிவு, டிஜிற்றல் தொழில்நுட்ப அமைச்சு ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஏற்கனவே ஒரு விசேட வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருவதுடன், இது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. எதிர்காலத்தில் நாட்டில் ஏற்படக்கூடிய இத்தகைய சைபர் அச்சுறுத்தல்கள் மற்றும் குற்றங்கள் குறித்து, இலங்கை காவல் துறை மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகிய இரண்டும் இணைந்து விசேட அவதானம் செலுத்தி, அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தி வருகிறோம்-என்றார்.

(அ)

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே. 23

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 6 மாவட்டங்களுக்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தினால் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 9 மணிக்கு வெளியான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்தின் தெஹியோவிட்ட, தெரணியகல, ருவான்வெல்ல மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரி, அயகம, குருவிட்ட, எஹலியகொட ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்க, பாதுக்கை, கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்ல, இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மதுல்ல, கிரிஎல்ல, எலபாத்த, கலவானை, நிவித்திகல, கேகாலை மாவட்டத்தின் யட்டியாந்தோட்டை, களுத்துறை மாவட்டத்தின் ஹொரணை, புளத்சிங்கள, இங்கிரிய, பாலிந்தநுவர ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இரண்டாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, கேகாலை மாவட்டத்தின் புளத்கொஹூபிட்டிய, களுத்துறை மாவட்டத்தின் அகலவத்தை மற்றும் மத்துகம மற்றும் கம்பஹா மாவட்டத்தின் மீரிகம, திவுலப்பிட்டிய ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் முதலாம் நிலை மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கையின் கல்விச் சீர்திருத்தம் குறித்து பிரிட்டன் கல்வி செயலருடன் பிரதமர் பேச்சு



லண்டன், மே. 23

இலங்கையில் நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் விரி வான கல்விச் சீர்தி ருத்தங்கள் மற்றும் தொழிற்கல்வி வாய்ப் புகளைப் பலப்படுத் துவது குறித்து ஐக்கிய இராச்சியத்தின் கல்விச் செயலாளருடன் பிரதமர் ஹரிணி அமரசூரிய கலந்துரையாடினார்.

ஐக்கிய இராச்சியத்திற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஐக்கிய இராச்சியத்தின் கல்விச் செயலாளர் பிரிட்ஜெட் பிலிப்சனை சந்தித்து இருதரப்புக் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

இதன்போது, நிறுவன ரீதியான கூட்டுறவைப் பேணுதல், உயர்கல்வியின் தரத்தை உறுதி செய்தல், மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவம் குறித்து இரு தரப்பினரினதும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு, இலங்கைக்கும் ஐக்கிய இராச்சியத்திற்கும் இடையில் கல்வித் துறையில் நிலவும் நீண்ட கால, வரலாற்று ரீதியான ஒத்துழைப்பை மீண்டும் உறுதிப்படுத்தி மாணவர் பரிமாற்றம் கூட்டு வேலைத் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சித் துறைகளில் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவது குறித்தும் இரு தரப்பினராலும் கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது இரு நாடுகளுக்கும் இடையே கல்விசார் ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்துவதற்கான பொதுவான உடன்பாடுகளுடன் இந்தச் சந்திப்பு நிறைவடைந்தது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அம்பாறை விவசாயிகள் 63 கோடி ரூபாய் செலுத்தியும் உரம் இன்னும் வரவில்லை!

## சபையில் உதுமாலெப்பை எம்.பி கவலை



அம்பாறை, மே. 23

அம்பாறை மாவட்ட விவசாயிகள் உரம் பெற்றுக்கொள்வதற்காக சுமார் 63 கோடி ரூபாய் தொகையை முன்கூட்டியே செலுத்தியிருந்தபோதிலும், இதுவரை உரங்கள் முழுமையாக வழங்கப்படாததால் விவசாய நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் எம்.எஸ். உதுமாலெப்பை எம்.பி தெரிவித்துள்ளார்.

நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் உள்நாட்டு வருவாய் (திருத்தச்) சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நாட்டின் முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களில் ஒன்றான அம்பாறையில் விவசாயிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் உரம் போன்ற விவசாய உள்ளீடுகள் தாமதமாக கிடைப்பது பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வருவதாக சுட்டிக்காட்டினார்.

தேசிய ரீதியில் சுமார் 22 வீத நெல் உற்பத்தி அம்பாறை மாவட்டத்திலிருந்து கிடைக்கப் பெறுவதாக தெரிவித்த அவர், நீண்ட காலமாக நீரில் மூழ்கியுள்ள 12,500 ஏக்கர் காணிகளுக்கான சம்புக்களப்பு-கரைவாகுப் பற்று வடிச்சல் திட்டம் நிறைவேற்றப்பட்டால், அம்பாறை மாவட்டத்தின் நெல் உற்பத்தி 30 வீதமாக உயர வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார்.

அம்பாறை மாவட்ட விவசாயிகள் உரம் பெற்றுக்கொள்ள மொத்தமாக 63 கோடி ரூபாயை செலுத்தியுள்ளதாகவும், இருந்தபோதிலும் உரங்கள் உரிய நேரத்தில் கிடைக்காததால் விவசாயப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்மாந்துறை, மல்வத்தை, இறக்காமம், அட்டாளைச்சேனை, கோமாரி, தம்பிலுவில், அக்கரைப்பற்று, நிந்தவூர், சாய்ந்தமருது, காரைதீவு, பொத்துவில் உள்ளிட்ட பல பிரதேச விவசாயிகள் கோடிக்கணக்கான தொகைகளை செலுத்தியுள்ளதாகவும் அவர் சபையில் விவரித்தார்.

# மாகாண மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவான லீடர் அஸ்ரப் மாணவர்கள்

அம்பாறை, மே. 23

2026 ஆம் ஆண்டுக்கான கல்முனை வலய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் சிறப்பான திறமையை வெளிப்படுத்திய சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலய மாணவர்கள் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இப்போட்டியில் இடம் பெற்ற முக்கியமான இரண்டு போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்றதன் மூலம், பாடசாலைக்கு பெருமை சேர்க்கும் வகையில் மாணவர்கள் இந்த சாதனையைப் பதிவு செய்துள்ளனர்.

மாணவர்களின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் எம்.எப்.எம். றிபாஸ் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.எ. ஆபாக் ஆகியோருக்கு பாடசாலை சமூகம் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த அதிபர், பிரதியதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் பாராட்டப்பட்டுள்ளது. (அ)



# அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் பதில் பணிப்பாளராக சஹூதுல் நஜீம்

அம்பாறை, மே. 23

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பதில் வலயக் கல்விப் பணிப்பாளராக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம். ரஹ்மத்துல்லாஹ் ஓய்வு பெற்றுச் சென்றமையினால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு, புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் நேர்முகப் பரீட்சை மூலம் நியமிக்கப்படும் வரை, கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி வரும் எம்.எஸ். சஹூதுல் நஜீம் அவர்களுக்கு மேலதிக பொறுப்பாக இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (அ)



# விலைவாசி உயர்வால் மூதூர், வெருகல் குச்சவெளி, கிண்ணியா மக்கள் பாதிப்பு!

திருமலை, மே. 23

அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்து வரும் விலைவாசியின் காரணமாக அனைத்து மக்களும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் திருகோணமலை மாவட்ட செயலாளர் சின்னமோகன் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

எரிபொருள் விலை, பால்மா விலை உயர்வு எரிவாயு, மின் கட்டணம் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உப்பூறல், சீனன்வெளி, நல்லூர் மற்றும் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாட்டாளிபுரம், சூடைக்குடா, கூனித்தீவு, கடற்கரைச்சேனை, கங்குவேலி, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் திரியாய், தென்னைமரவாடி, புல்மோட்டை, இறக்கக்கண்டி, மற்றும் கிண்ணியாவில் கரையோரப்பகுதி பொது மக்கள் உட்பட பல பிரதேச கிராமப்புறங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ் விலை உயர்வு விவசாயத்துறையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது .

எனவே இந்த விலை உயர்வு நெருக்கடிகளைத் தொடரவிடாமல் அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)

# கல்முனை மாநகர சபையின் சேவை நலன் பாராட்டு விழா

அம்பாறை, மே. 23

கல்முனை மாநகர சபையில் கடமையாற்றி, இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன் தினம் வியாழக்கிழமை மாலை மாநகர சபை கேட்போர் கூடத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் சுப்ரமணியம் சுபராஜன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இதன்போது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களான முபீனா பைசல் அமான், ஏ. அப்துல் வாசித், எம்.ஏ. சாபிர், வி. சுகுமார், ஏ.எச்.எம். ஹஸீனா, ஏ.எச். அஹ்சன் றியாசத், எம்.எஸ்.. உவைத், நிரோஷினி சுபாஷ் சந்திரபோஸ், யூ.எல்.எம். நஸ்ரின் ஹாஜா, ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களான கே. மகேந்திரராசா, என். பாக்கியராஜா

ஆகியோரின் உன்னத சேவைகள் குறித்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன் பரிசுகள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். (அ)



# குப்பை கூழங்களால் துர்நாற்றம்!



அம்பாறை, மே. 23

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கண்ணகி அம்மன் கோவில் காணியின் போடப்படும் குப்பையினால் வீதியின் இரு மருங்கிலும் குப்பை கூழங்கள் நிரம்பி வழிகின்றன.

இதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் அப்பகுதியால் உடற்பயிற்சிக்காகச் செல்லும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இது தவிர அருகில் உள்ள கடற்கரைப் பகுதிக்கும் குறித்த குப்பை கூழங்கள் காற்றினால் பரவி விழுகின்றன.

குறித்த காணியில் கொட்டப்படும் குப்பைகளில் பியர் ரின்கள், பிளாஸ்ரிக் கலன்கள் உள்ளிட்ட உக்க முடியாத பல்வேறு பொருள்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

காணியில் உள்ள குப்பைகளில் நீர் தேங்குவதனால் டெங்கு போன்ற நோய்களும் பரவுவதற்கு காரணமாக அமைகின்றது.

இது குறித்து கல்முனை மாநகர சபையினர் எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் சித்திவிநாயகர் ஆலயம் புனரமைப்பு!



அம்பாறை, மே. 22

கல்முனை ஆதார வைத்தியசாலையில் சைவசமய ஆகமப்படி உருவாக்கப்பட்ட பழமை வாய்ந்த சித்தி விநாயகர் ஆலயத்தில் தற்போது

புனருத்தாரண வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

ஆலய புனரமைப்புப் பணிகளை அண்மையில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவி. கோடீஸ்வரன் வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் குண.சுகுணன் சகிதம் சென்று பார்வையிட்டார்.

இவ்வாலயம் அடுத்த வருடம் மகா கும்பாபிஷேகம் காணும் என எதிர்பார்க்கப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பொருளாதார நெருக்கடி...

இருந்தது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்காக அரசாங்கம் தற்போது கணிசமான பணிகளை மேற்கொண்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அதேபோல், சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்படும் நாட்டை உருவாக்கும் பொறுப்பு தனது அரசாங்கத்தின் கீழ் நிறைவேற்றப்படாவிட்டால், வேறு எந்த அரசாங்கத்தின் கீழும் அது நிறைவேறாது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று அதிகாரம், செல்வம் மற்றும் அந்தஸ்து ஆகியவற்றைப் பார்க்காமல் அனைவருக்கும் சட்டம் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், ஓய்வூதியம் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் எல்லையற்ற சலுகைகளை இரத்து செய்து, அரசியல்வாதிகளைப் பொதுமக்களுக்காக பணியாற்றுபவர்களாக மாற்றுவதற்குத் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (அ)

## கிழக்கை...

நேற்று பிற்பகல் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட விசேட ஒருங்கிணை ப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கடலரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள கிழக்குக் கடற்கரையைப் பாதுகாப்பது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, அந்தக் கடற்க ரையைப் பாதுகாத்து, சுற்றுலாத்துறையை மேம்படுத் துவதற்கான முறையான திட்டமொன்றை விரைவாகத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கடல் தடுப்புச்சுவர் அமைப்பது கடலரிப்பைத் தடுப்பதற்கான ஒரு நடைமுறைச் சாத்தியமான தீர்வு அல்ல என்பதை மேலும் சுட்டிக்காட்டிய ஜனாதி பதி அநுர குமார திசாநாயக்க, ஒலுவில் துறை முகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மீன்பிடித் துறைமுகம் குறித்தும் கவனம் செலுத்தி, இப்பிரச்னைக்கு நிரந்தர தீர்வை வழங்கக்கூடிய விஞ்ஞான பூர்வமான முறைமை ஒன்றைப் பற்றி விரைவான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

மேலும், மிகவும் கவர்ச்சிகரமான கடற்கரையைக் கொண்ட கிழக்குக் கடற்கரையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான அதிக சாத்தியக்கூறுகள் இருப்பதைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, கடற்கரையை அண்மித்து ஹோட்டல்களை நடத்துவதில் வெவ்வேறு நபர்களுக்கு வெவ்வேறு விதமாக செயற்படுவதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளமை தொடர்பாக தனக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளதாகவும், எக்காரணம் கொண்டும் அத்தகையதொரு நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்க வேண்டாம் என்றும் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத காணி நிரப்பல்கள் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, இனிவரும் காலங்களில் அதற்கு இடமளிக்க வேண்டாம் என பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவுறுத்தினார்.

யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும், கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து இங்கு கவனம் செலுத்திய ஜனாதிபதி, அது குறித்து உடனடியாகக் கவனம் செலுத்தி, அவர்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான திட்டங்களை தயாரிக்குமாறும் அறிவுறுத்தினார். (அ)

## வலிகாமம் வடக்கு...

இருந்து வெளியேற்றப் பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும், அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்பு தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகின்றன.

இந்தநிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக போராடி வரும் காணி உரிமையாளர்கள், காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக முடிவெடுத்திருந்தனர். இதன்படி நேற்றும் போராட்டத்தை முன்னடுத்தனர்.

எதிர்வரும் 25ஆம் திகதி முதல் வெசாக் தினம் வரை அப்பகுதி முழுவதும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு பாரிய அளவில் போராட்டம் முன்னெடுக்கவுள்ளதாகவும், இதற்கு அனைவரையும் வருகை தருமாறு போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## உலகளாவிய...

நெருக்கடியின் விளைவே எனவும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் காரணமாக எரிபொருள் விலைகள், எரிவாயு மற்றும் உர விலைகள், அத்துடன் கப்பல் போக்குவரத்து மற்றும் காப்புறுதிக் கட்டணங்கள் வேகமாக அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் டொலர் விலையும், ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களின் டொலர் விலையும் மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், ஏற்றுமதி பொருள்களின் டொலர் விலையை விட இறக்குமதி பொருள்களின் டொலர் விலைகள் அதிகரித்தமை இலங்கையை பிரதானமாகப் பாதித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், உலகளாவிய ரீதியில் டொலரை ஸ்திரப்படுத்துவதற்கும் டொலருக்கு அதிக இலாபத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக, டொலருக்கான தேவை அதிகரித்து, முதலீடுகள் டொலரை நோக்கி நகரும் போக்கு காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடுகையில் டொலர் வலுவடைந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அத்துடன், கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களில் எரிபொருள் விலைகள் வேகமாக அதிகரித்துள்ளதாகவும், அந்த விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள்களுக்கான கொடுப்பனவுகள் மே மாதத்தில் செலுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்த அமைச்சர், மே மாதமளவில் அது 521 மில்லியன் டொலர்கள் வரை அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இருப்பினும், எதிர்வரும் 27ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் 2 தவணைகளின் பணத்தை ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்வதற்காக அதன் செயற்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த 2 தவணைகளும் கிடைக்கும் என நம்புவதாகவும் அவர் கூறினார்.

இதுதவிர, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடமிருந்தும் மேலும் பல மில்லியன் டொலர்கள் கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில், எக்காரணத்தைக் கொண்டும் எந்தவொரு அத்தியாவசிய அல்லது இதர பொருள்களுக்கும் இறக்குமதித் தடைகள் விதிக்கப்பட மாட்டாது எனவும் அனில் ஜயந்த பெர்னா ண்டோ திட்டவட்டமாக குறிப்பிட்டார். (அ)

## இலங்கையின்...

வழங்கப்படவுள்ள நிதி தொடர்பிலான ஐந்தாவது மற்றும் ஆறாவது கூட்டுச் சீராய்வுகள், எதிர்வரும் புதன்கிழமை பரிசீலிக்கப்படவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுத் தலைவர் எவன் பாபஜோர்ஜியு, கடந்த சில ஆண்டுகளில் பேரண்டப் பொருளாதார நிலைத்தன்மையை மீட்டெடுப்பதிலும், கையிருப்பை மீண்டும் உருவாக்குவதிலும், நம்பிக்கையை வலுப்படுத்துவதிலும் இலங்கை அதிகாரிகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த முயற்சிகள் பொதுமக்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்டு, பொருளாதாரத்தை ஒரு "உறுதியான அடித்தளத்தில்" நிலைநிறுத்த உதவியுள்ளதாகவும் அவர் கூறினார்.

எனினும், கடினமான வெளிப்புறச் சூழலில் பல பொருளாதாரங்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் போலவே, அண்மைய உலகளாவிய நிகழ்வுகளும் புதுப்பிக்கப்பட்ட அழுத்தங்களை உருவாக்கியுள்ளன. இந்த சாவல்களை சமாளிப்பது ஒருபோதும் எளிதானதல்ல, ஆனால் இலங்கையின் கொள்கைக் கட்டமைப்பு இன்று கடந்த காலத்தை விட கணிசமாக வலுவாக உள்ளது. ஒரு சீரான கொள்கை திசையைப் பேணுவதும், மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப பொருளாதாரம் தன்னை சரிசெய்துகொள்ள அனுமதிப்பதும் முன்னேற்றத்தைத் தக்கவைப்பதற்கு அவசியமானவை.

சீர்திருத்தத் திட்டம் முன்னேறிச் செல்லும் நிலையில், இலங்கை அதிகாரிகளுடன் தொடர்ந்து நெருங்கிய ஈடுபாட்டை நாணய நிதியம் எதிர்நோக்குவதாகவும் எவன் பாபஜோர்ஜியு மேலும் கூறினார். (அ)

## ரூபாயின் பெறுமதி...

சமல் சஞ்சீவ எச்சரித்துள்ளார்.

மருந்துகளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான ரூபாயின் மதிப்பு கணிசமாக அதிகரித்துள்ளதால், இறக்குமதியாளர்களும் சுகாதாரத் துறையினரும் பாரிய சவால்களை எதிர்கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பல பகுதிகளில் உள்ள மருந்தகங்களில் ஏற்கனவே சில வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவத் தொடங்கியுள்ளது.

இந்த நிலைமை இப்படியே தொடருமானால், கடந்த 2022 ஆம் ஆண்டு நாடு எதிர்கொண்ட கடுமையான மருந்து தட்டுப்பாட்டுடன் கூடிய சுகாதார நெருக்கடியை இலங்கை மீண்டும் சந்திக்க நேரிடும்.

உள்நாட்டில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவு அதிகரிப்பதனால், அது திறைசேரிக்கு தாங்க முடியாத நிதிச் சுமையை ஏற்படுத்தும்.

எனவே, எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இந்த பாரிய சுகாதார நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, மருந்து இறக்குமதிக்கான வரிச் சலுகைகள் மற்றும் இதர நிவாரண வழிமுறைகளை வழங்குவதில் திறைசேரி உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (அ)

## பஸில் ராஜபக்ஷ...

"பிரௌ ன்ஸ் ஹில்" பகுதியில் சட்டவிரோதமாகப் பெறப்பட்ட நிதியைப் பயன்படுத்தி காணி வாங்கிய விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணையின்போது ஆஜராகத் தவறியதாலேயே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் இருப்பதற்கு அவரது உடல்நிலை காரணம் என சட்டத்தரணிகள் சமர்ப்பித்த வாதங்களை மாத்தறை நீதவான் சதுர திஸாநாயக்க நிராகரித்தார். இந்த வழக்கில் பஸில் ராஜபக்ஷவுடன் அவரது உறவினர்களான அயோமா மற்றும் திஸ்ஸ ஆகியோரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

## அவசரமாக பாராளுமன்ற...

உறுப்பினர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

பாராளுமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை கூடியபோது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க, கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கான எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பில் சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க, பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவது தொடர்பில் ஆராய முடியும். அந்த கூட்டத்துக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

மீண்டும் எழுந்து உரையாற்றிய எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக, வழமையாக அடுத்த பாராளுமன்ற அமர்வு நடப்பதற்கு முன்னர் இறுதி பாராளுமன்ற வாரத்தில் பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான கட்சித் தலைவர்கள் கூட்டத்தை கூட்டப்படும். ஆனால் இம்முறை அந்த கூட்டம் இன்னும் நடத்தப்படவில்லை.

இந்நிலையில் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு அரசியல் கட்சிகள், கட்சித் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துமாறு கோரிக்கை விடுக்கின்றனர்-என்றார். (அ)

## சட்டத்துக்கு பயந்து...

தொடங்கியுள்ளதாக தொழில் பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

நாமல் தரப்பு சட்டத்தரணிகள் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தில் மிகவும் அவசரமாகக் கேள்வி எழுப்பினார்கள். "சஹ்ரானின் வாக்குமூலம் எங்கே என்று அவர் கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள்.

ஆனால், இப்போது அந்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், அதைப் பற்றிப் பேசாமல் சம்பந்தமில்லாத வெற்றுக்கதைகளை கூறிவருகின்றனர். அவர்கள் செய்த குற்றங்களுக்காக இப்போது சட்டம் அவர்களைத் துரத்திக் கொண்டு பின்னால் வருகிறது. இதனால் தான் அவர்கள் தற்போது பெரும் பதற்றமடைந்துள்ளார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் எங்கே? வேகம் போதவில்லை , இன்னும் ஒன்றும் நடக்கவில்லையே என்று அவர்கள் எள்ளி நகையாடினார்கள். ஆனால், தற்போது விசாரணைகள் மிகச் சரியான பாதையில் வேகமெடுத்துள்ளன. முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவு பிரதானி சுரேஷ் சலே என்பவர் மாத்திரம் இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரி அல்ல. சுரேஷ் சலே போன்றவர்களைக் கொண்டு 270க்கும் மேற்பட்ட அப்பாவி கத்தோலிக்கப் பக்தர்களைக் கொன்று, மேலும் 500க்கும் அதிகமானோரை அங்கவீனமடைய செய்ய அவருக்கு என்ன தனிப்பட்ட தேவை இருக்கப் போகிறது?

இதன் பின்னணியில் ஒரு பாரிய அரசியல் கரம் இருந்தது. பிணங்களின் மீது ஏறி நின்று அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற அந்தப் பேராசைதான் இதன் பின்னணியில் இருந்தது.

அப்படிப்பட்ட கொடூரங்களைச் செய்த "கனவான்கள்" தான் இன்று சமூக ஊடகமான "எக்ஸ்" தளத்தில் பதிவுகளை இட்டு, "பொதுமக்களின் பணத்தைச் செலவழித்து பிரான்சுக்குச் சென்று விசாரணை நடத்துவதன் தேவை என்ன?" என்று நம்மிடம் கேள்வி எழுப்புகிறார்கள்.

பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்று சர்வதேச ரீதியில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு எவ்வளவு பொதுப்பணம் செலவானாலும் சரி, எவ்வித தயக்கமுமின்றி அதனைச் செலவு செய்து, இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளை நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துவதுதான் தற்போதைய அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும்.

அதனை நிறைவேற்றுவதில் இந்த அரசாங்கம் ஒருபோதும் பின்வாங்காது என்ற உறுதியை நாம் மக்களுக்கு வழங்குகிறோம்.

இதுவரைக் காலம் நீங்கள் இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்துக்களுடனும், அப்பாவி மக்களின் உயிர்களுடனும் விளையாடினீர்கள். இனிமேலும் இந்த நாட்டில் அவற்றுக்கு ஒருபோதும் இடமில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன் - என்றார். (அ)

## இலங்கை ரூபாய்...

அவர் தனது எக்ஸ் பதிவில் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலை குறித்து அவசர பாராளுமன்ற விவாதமொன்றை நடத்துமாறு கோரி, தானும் ஏனைய கட்சித் தலைவர்களும் சபாநாயகரைச் சந்தித்துள்ளதாக அவர் குறித்த பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மக்களுக்கு உண்மையாக இருக்குமாறும், தற்போதைய நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன்னர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தனது பதிவின் மூலம் வலியுறுத்தியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# தமிழ்மொழி மூல தகவலறியும் விண்ணப்பங்கள் புறக்கணிப்பு!

## ஆணைக்குழுவின் நடவடிக்கையால் மக்கள் கவலை

கொழும்பு, மே. 23

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தமிழ் மொழியில் தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதாக ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இச்சட்டத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். எனினும், அரச திணைக்களங்களில் முதற்கட்டமாக கோரப்படும் தகவல்கள் மறுக்கப்படும் பட்சத்தில், அதே திணைக்களத்தின் குறித்தளிக்கப்பட்ட அலுவலருக்கு விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்கின்றனர்.

அங்கேயும் நீதி கிடைக்காத நிலையில், இறுதியாக கொழும்பிலுள்ள தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிடம் பொதுமக்கள் உரிய முறைப்படி முறையிடுகின்றனர்.

ஆனால் அங்கேயும் தங்களது விண்ணப்பங்களுக்கு உரிய பதில்கள் கிடைப்பதில்லை எனவும், தமிழ்மொழி மூலம் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் மேன்முறையீடுகள் போதிய கவனத்திற்கு உட்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு சமீபகாலமாக வலுவாக எழுந்துள்ளது.

மொழிபெயர்ப்புப் பற்றாக்குறை, தமிழ் பேசும் அதிகாரிகளின் ஆளணிப் பற்றாக்குறை போன்ற காரணங்களால் தமிழ் விண்ணப்பதாரிகளின் கோரிக்கைகள் மாதக் கணக்கில் கிடப்பில் போடப்படுவதாக அல்லது கவனத்திலேயே எடுக்கப்படாதுள்ளதாக பாதிக்கப்படுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

அரசமைப்பின் படி தமிழ் மொழியும் உத்தியோகபூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நாட்டில், தகவல் அறியும் உரிமை போன்றதொரு ஜனநாயகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் இத்தகைய மொழிசார்ந்த பாகுபாடுகளும், புறக்கணிப்புகளும் தொடர்வது தமிழ் மக்களிடையே மிகுந்த ஏமாற்றத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. (அ)

# களனி கங்கைக்கு அண்மையில் வாழ்வோருக்கு வெள்ள அபாயம்

கொழும்பு, மே. 23

களனி கங்கையை சூழவுள்ள பகுதிகளில் தற்போது பெய்து வரும் பலத்த மழை காரணமாக சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயம் காணப்படுவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ருவன்வெல்ல, சீதாவக்க, தொம்பே, தெஹிஓவிட்ட, எஹலியகொட, எட்டியாந்தோட்டை மற்றும் புலத்கொஹூபிட்டிய ஆகிய பகுதிகளைச் சூழவுள்ள இடங்களில் சிறிய அளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

களனி கங்கையின் மேல் நீரேந்து பகுதிகளில் தற்போது 300 மில்லிமீற்றரை நெருங்கிய கணிசமான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த மழை நிலவரம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் களனி கங்கையில் பராமரிக்கப்பட்டு வரும் ஆற்றின் நீர்மட்ட அளவீட்டு கருவிகளின் தரவுகளை பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் இச்சிறிய வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும் என அத்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சீரற்ற வானிலையால் புத்தளம் ரயில் போக்குவரத்து பாதிப்பு!

கொழும்பு, மே. 23

சிலாபம் புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள வீதியில் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்தமை காரணமாக, புத்தளம் ரயில் பாதையிலான ரயில் போக்குவரத்துகளுக்கு தற்காலிகமாக தடை ஏற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மரத்தை அகற்றி போக்குவரத்துகளை வழமைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. (அ)

# மோசமான காலநிலை காரணமாக மத்தளவுக்கு திரும்பிய விமானங்கள்!

கொழும்பு, மே. 23

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று தரையிறங்கவிருந்த பல விமானங்கள், அப்பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்குத் திருப்பி விடப்பட்டன.

கட்டுயாநயக்க பகுதியில் பெய்த கனமழை மற்றும் குறைந்த பார்வைத் திறன் காரணமாக, அங்கு தரையிங்க சுமார் 6 விமானங்கள் மத்தளவுக்கு திருப்பி விடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பதின்ம வயதுக் கர்ப்பங்கள் இலங்கையில் குறைவடைவு

கொழும்பு, மே. 23

இலங்கையில் பதின்ம வயதுக் கர்ப்பங்கள் குறைவடைந்துள்ள போதிலும், இளைஞர்களிடையே ஆபத்தான பாலியல் சோதனையிடல் நடத்தைகள் குறையவில்லை என குடும்ப சுகாதார பணியகம் தெரிவித்துள்ளது.

ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வுத் திட்டங்களில் இளைஞர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளதன் காரணமாகவே பதின்ம வயதுக் கர்ப்பங்கள் குறைந்துள்ளதாக குடும்ப சுகாதார பணியகத்தின் சமூக விசேட வைத்திய நிபுணர் சிறாந்திகா விதான தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 20 வயதிற்குட்பட்டவர்களின் கர்ப்பங்களே பதின்ம வயதுக் கர்ப்பங்களாகக் கருதப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், சுகாதார அதிகாரிகளின் ஊடாக பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறினார்.

முன்னரைப் போலன்றி தற்பொழுது பிரசவத்திற்கு முன்னரே வைத்தியர்களை நாடும் நேர்மறையான போக்கு அதிகரித்துள்ளதால், பிரசவக் கால அபாயங்கள் குறைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பொதுநலவாயச் செயலாளருடன் பிரதமர் ஹரிணி லண்டனில் பேச்சு

லண்டன், மே. 23

ஐக்கிய இராச்சியத்துக்கான தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் ஓர் அங்கமாக, லண்டனில் அமைந்துள்ள மார்ல்பரோ இல்லத்தில் பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் ஷெர்லி அயோர்கோர் போச்வேயை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று முன் தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

காலநிலை மாற்றம், காலநிலை நிதியுதவி, ஜனநாயக நல்லாட்சி, பெண்களின் அரசியல் பங்களிப்பு மற்றும் உறுப்பு நாடுகளுக்குப் பொதுநலவாய அமைப்பின் தொடர்ச்சியான ஆதரவு ஆகியன குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு, மீட்சியடைதல், நிலைபேறான அபிவிருத்தி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நல்லாட்சி ஆகியவற்றில் இலங்கை கொண்டுள்ள அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியதுடன், பொதுநலவாய செயலகம் வழங்கி வரும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்கும் ஆதரவுக்கும் இதன்போது பிரதமர் தனது நன்றியைத் தெரிவித்தார். (அ)

# அவிசாவளை வீதியில் வெள்ளம் போக்குவரத்து பெரும் பாதிப்பு!

கொழும்பு, மே. 23

தொடர்ந்து பெய்து வரும் பலத்த மழை காரணமாக கொழும்பு - அவிசாவளை பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவக்பிட்டிய - ரன்வலபான பகுதிக்கு அருகில் பிரதான வீதி வெள்ள நீரில் மூழ்கியுள்ளமையே இதற்கு காரணமாகும்.

இதன் காரணமாக, அந்தப் பகுதியினூடாக பயணிக்கும் வாகனப் போக்குவரத்துகளுக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், சிறிய ரக வாகனங்கள் பயணிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டது.

எனவே, இந்த வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும், அவதானத்துடன் செயற்படுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# வெள்ளத்தில் மூழ்கியது சிலாபம் வைத்தியசாலை

## நோயாளர்கள் பெரும் அவதி

கொழும்பு, மே. 23

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக சிலாபம் பொது வைத்தியசாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. வைத்தியசாலையின் 3 சிகிச்சை அறைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் அந்த சிகிச்சை அறைகளில் இருந்த நோயாளர்களை வேறு சிகிச்சை அறைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் தினேஷ் கொக்கல தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரவு முதல் பெய்து வரும் பலத்த மழை காரணமாக புத்தளம் பகுதியின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதுடன், சில வீதிகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் புத்தளம்-மாதம்பை, கலகிட்டியாவ வீதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்தமையினால் அவ்வீதியின் போக்குவரத்து முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளது. இதன் காரணமாக அவ்வீதியைப் பயன்படுத்தும் வாகனச் சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு மாதம்பை பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ)

# தேங்கி கிடக்கும் 1 இலட்சம் வாகனப் பதிவுத் தகடுகள்!

கொழும்பு, மே. 23

கடந்த 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அச்சிடப்பட்ட, ஆனால் வாகன உரிமையாளர்களால் இன்னும் பெறப்படாத சுமார் ஒரு இலட்சம் வாகனப் பதிவுத் தகடுகள், தற்போது அதன் வளாகத்தில் குவிந்து கிடப்பதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாராஹேன்பிட்டியவில் உள்ள அதன் தலைமை அலுவலகத்திலும், கொழும்பு மாவட்டம் உட்பட நாடு முழுவதும் உள்ள மாவட்ட அலுவலகங்களிலும் உரிமை கோரப்படாத பதிவுத் தகடுகளின் பெரும் இருப்பு குவிந்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் பதிவுத் தகடுகளுக்கு விண்ணப்பித்து, இன்னும் அவற்றைப் பெறாத அனைத்து வாகன உரிமையாளர்களும், ஜூன் 30, 2026-க்கு முன்னர் தங்களது தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் உள்ள உரிமையாளர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்கள் அல்லது மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் கிளை அலுவலகங்களிலிருந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தகவல்களுக்கோ அல்லது விசாரணைகளுக்கோ 011-2033333 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாகனப்பதிவுத்தகடுப்பிரிவை தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media